# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 1998 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, அரச அச்சகக் கூட்டுத்தாபனச் (திருத்தச்) சட்டம்

---

*(1998, மாச்சு மாதம் 27 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1998, மாச்சு மாதம் 27 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக்** *குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

*கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

**விலை: ரூபா 4.00** **தபாற் செலவு: ரூபா 2.50**

## 1998 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, அரச அச்சகக் கூட்டுத்தாபனச் (திருத்தச்) சட்டம்

[1998 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 27 ஆந் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ.— ஓ. 6/93

### 1968 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, அரச அச்சகக் கூட்டுத்தாபனச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 1998 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, அரச அச்சகக் கூட்டுத்தாபன (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தோராம் ஆண்டின் 51 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1968 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க அரச அச்சகக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 4 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— 1968 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அந்தப் பிரிவின் (இ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :—

"(இ) கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்காக, அச்சிடப்படும் அல்லது வெளியிடப்படும் நூல்கள் அல்லது வெளியீடுகள் தவிர்ந்தனவான கூட்டுத்தாபனத்தினால் அல்லது இலங்கையில் உள்ள வேறு ஏதேனும் நிறுவனத்தினால் அச்சிடப்படும் அல்லது வெளியிடப்படும் நூல்கள், கல்வித் துணைநூல்கள், புதினத்தாள்கள், சஞ்சிகைகள் அத்துடன் வேறு வெளியீடுகள் என்பனவற்றின் விற்பனை, விநியோகம் அத்துடன் ஏற்றுமதி செய்தல் என்பனவற்றையும் வெளிநாடுகளில் அச்சிடும் அல்லது வெளியிடும் நூல்கள், கல்வித் துணைநூல்கள், புதினத்தாள்கள், சஞ்சிகைகள் அத்துடன் வேறு வெளியீடுகள் என்பனவற்றை இறக்குமதி செய்தல் ஆகியவற்றையும் பொறுப்பேற்றல் ;"

2 — ட 045768 — 1,100 (97/09)

(2) அவ்வுட்பிரிவின் (ஈ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :—

"(ஈ) நூல்கள், கல்வித் துணைநூல்கள், புதினத் தாள்கள், சஞ்சிகைகள் அத்துடன் வேறு வெளியீடுகள் என்பவற்றை இணைத்து வெளியிடுவதை மேற்கொள்ளல்;"

(3) அந்த உட்பிரிவின் (உ) என்னும் பந்தியை (எ) என மீள இலக்கமிடுவதன் மூலமும் ; அத்துடன்

(4) அந்த உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளை உட்புகுத்துவதன் மூலமும் :—

(உ) எழுதுகருவிகள் அத்துடன் வேறு சார்புப் பொருள்களை உற்பத்தி செய்தல், இறக்குமதி செய்தல், ஏற்றுமதி செய்தல், கொள்வனவு செய்தல் அத்துடன் விற்பனை செய்தல் என்பவற்றை மேற்கொள்ளல் ;

(ஊ) அச்சிடுதல் அல்லது வெளியிடுதல் தொடர்பில் வேறேதேனும் சேவைகளுக்கு ஏற்பாடு செய்தல் ; அத்துடன்"

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

3. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387; (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.